# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.89 of 2025
Prosecution Witness No.P.W.7 (L.W.7)

| | |
|---|---|
| Name | **விக்னேஷ்** |
| Father/Husband Name | **விநாயகம்** |
| Calling/Occupation | **கூலி** |
| Age | 26 |
| Address | **கீழ்ப்பள்ளிப்பட்டு.** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.03.2026.

(A1 to A3 Present)

**முதல் விசாரணை**

**நான் கீழ்பள்ளிப்பட்டில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த** 26.05.2023 **அன்று** 11.30 **மணி முதல்** 12.00 **மணி இருக்கும் கண்ணமங்கலம் கேட் எதிரில் நானும், என்னுடன் பணியாற்றும் முனியன் என்பவரும் இருக்கும்போது எங்களை அழைத்து போலீசார் விசாரித்தார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் யாரும் அந்த இடத்தில் இருந்தார்களா என்று தெரியவில்லை. என்னையும் முனியன் என்பவரையும் விசாரித்து கையொப்பம் பெற்றுக்கொண்டு விலாசத்தை எழுதிக்கொண்டார்கள்.**

இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமுலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. முதல் கையொப்பம் யாருடையது என்று தெரியவில்லை. நானும் முனியன் என்பவரும் அந்த இடத்தில் விலாசம் வாங்கும்போதும் கையொப்பம் வாங்கும்போதும் இருந்தோம்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் நான் ஆஜர் 1ம் எதிரி இந்த வழக்கு சம்பந்தமாக எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைது செய்தார் என்றும் இந்த வழக்கு சம்பவம் குறித்து 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதை எங்கள் முன்னிலையில் கணினியில் டைப் செய்து ஆஜர் 1ம் எதிரி கையொப்பம் செய்தார் என்றும் பின்னர் சாட்சி கையொப்பமாக முனியனும் நானும் கையொப்பம் செய்தோம் என்றும் பின்னர் அன்றே வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை ஆஜர் 1ம் எதிரி எடுத்து கொடுத்தார என்றும் அதை 12.30 மணி அளவில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிக்கொண்டு எங்கள் இருவரிடமும் சாட்சி கையொப்பம் வாங்கினார் என்றும் பின்னர் வழக்கு சம்பந்தமாக எங்கள் இருவரையும் விசாரித்தோம் என்று சொல்லிவிட்டு ஆஜர் எதிரியை காப்பாற்ற

தற்போது நான் உண்மைக்கு மாற்றாக  பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.03.03 18:06:14 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.89 of 2025
Prosecution Witness No.P.W.8 (L.W.12)

| | |
|---|---|
| Name | பார்த்தசாரதி |
| Father/Husband Name | திருஞானம். |
| Calling/Occupation | காவல் ஆய்வாளர் |
| Age | 43 |
| Address | திருவண்ணாமலை மாவட்டம், வெறையூர் காவல் நிலையம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.03.2026.

(A1 to A3 Present)

சாட்சி நேரில் ஆஜரில்லை. சாட்சியை இணையதளம் மூலம் விசாரிக்க அனுமதி கோரி அதன் அடிப்படையில் திருவண்ணாமலை மாவட்ட நீதிமன்ற Video conference மூலம் அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கிறஞர் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது. சாட்சியப்பதிவு பிற்பகல் 03.20 மணிக்கு தொடங்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம், விரையூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளாக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.05.2023 அன்று நான் வேலூர் தாலுக்கா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது உதவி ஆய்வாளர் பதிவு செய்த குற்ற எண் 145/2023, சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2), 307 இ.த.ச வழக்கினை பதிவு செய்து மேல் விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்ததின் பெயரில் அன்றே நான் இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் காலை சுமார் 10.15 மணி அளவில் சென்று சாட்சிகள் யூசூப் மற்றும் மாயகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்தேன். அந்த வரைபடம் அ.த.சா.ஆ.6.

பின்னர் புகார்தாரர் குமரன், சாட்சிகள் செல்வகுமார், ஏழுமலை ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமுலங்கள் பதிவு செய்தேன். பின்னர் மகசர் சாட்சிகளையும் விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றே கண்ணமங்கலம் டோல்கேட் அருகில் இருந்த எதிரிகளை பகல் 11.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது எதிரி கோபி கார்த்திக் என்பவர் தாமாக கொடுத்த ஒப்புதல் வாககுமுலத்தினை நான் 11.40 மணி அளவில் சாட்சிகள் முனியன் மற்றும் விக்னேஷ் ஆகியோர் முன்னிலையில்

பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் மறைத்து வைத்துள்ள கத்தியை மறைத்து வைத்துள்ள இடத்தை அடையாளம் காண்பிப்பதாக சொன்னதால் அதே சாட்சிகள் முன்னிலையில் பகல் 12.30 மணிக்கு கண்ணமங்கலம் போலீஸ் பூத் பின்புறம் உள்ள முட்புதரிலிருந்து எதிரி கோபி கார்த்திக் என்பவர் தான் மறைத்து வைத்திருந்த பழம் அறுக்கம் சூரி கத்தி ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.7 ஆகும்.

பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ஒப்புதல் வாக்குமுலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான முனியன் மற்றும் விக்னேஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மற்ற எதிரிகள் முன் ஜாமீன் பெற்றுவிட்டதால் கைது செய்யவில்லை. பின்னர் 01.08.2023 அன்று காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.பாரத் அவர்களை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்து சான்று பெற்றேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கணினியில் தட்டச்சு செய்த சங்கீதா

அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து என் விசாரணையை முடித்து இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2), 307 உ/இ 34 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். என் விசாரணையில் சாட்சிகள் சம்பவத்தை பற்றி சொல்லியுள்ளனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

26.03.2023 அன்று அதிகாலை 00.30 மணிக்கு முதலில் சம்பவ இடத்திற்கு வந்த நபர் யார் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடவில்லை. 1ம் எதிரியின் அங்க அடையாளம் மற்றும் அவரின் ஆடையின் நிறம் குறித்தும் புகாரில் சொல்லப்படவில்லை. புகாரில் கடைசி வரியில் கத்தியால் குத்தி மிரட்டிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பொதுவாக கத்தி என்பதும் சூரி கத்தி என்பதும் வேறு வேறு என்றால் பொதுவாக கத்தி என்றுதான் சொல்வார்கள்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அதிகாலை 02.45 மணிக்கு பிறகு உடனடியாக எங்களிடம் எந்த புகாரும் கொடுக்கப்படவில்லை என்றால் உடனடியாக புகார் கொடுக்கவில்லை. வல்லம் டோல்பிளாசா அருகில்தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். அந்த டோல்பிளாசா 24 மணி நேரமும் இயங்கிக்கொண்டிருக்கும் என்றால் சரிதான். டோல்பிளாசாவில் சிசிடிவி கேமரா பொறுத்தப்பட்டுள்ளது என்றால்

பொறுத்தப்பட்டுள்ளது ஆனால் டோல்பிளாசிவிலிருந்து சம்பவ இடம் 100 மீட்டர் தாண்டி இருந்ததால் சம்பவ இடத்தில் நடந்த காட்சி பதிவுகள் பதிவாகவில்லை. டோல்பிளாசாவிலிருந்து அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில்தான் கிராமிய காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர்கள் 02.45 மணி முதல் காலை 08.00 மணி வரை எந்த புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் புகார் வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லப்படும் நிலையில் மருத்துவமனையில் எந்த இடத்தில் வைத்து பதிவு செய்தார் என்று என் விசாரணையில் சொல்லவில்லை.

மருத்துவர் பரத் வழங்கிய விபத்து பதிவேட்டில் குமரன் த/பெ. ஏகாம்பரம் 26.05.2023 அன்று அதிகாலை 03.40 A.M. க்குத்தான் மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். குமரன் மருத்துவமனையை விட்டு 26.05.2023 அன்று அதிகாலை 04.45 மணிக்கு Absconded ஆகிவிட்டதாக விபத்து பதிவேட்டில் சொல்லப்பட்டுள்ளது என்றால் குமரனுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்றும் செல்வகுமாருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. சாடசி மீண்டும் ஆவணத்தை பார்வையிட்டு Patient Absconded on 26.05.2023 at 04.45 a.m so opinion could not be given என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளிக்கிறார்.

சங்கீதா என்ற காவலர்தான் கணினியில் தட்டச்சு செய்தவர் என்றால் சரிதான். தலைமை காவலர் சங்கீதாவின் வாக்குமூலத்தில் வேலூர் கிராமிய காவல் நிலைய குற்ற எண் 145/2023, சட்டபிரிவுகள் 294(பி), 323, 307, 506(2) வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகளையும் எதிரிகளையும் காவல் ஆய்வாளர் விசாரித்து மேற்படி வாக்குமுலங்களை சொல்ல சொல்ல நான் காவல் நிலையத்தில் உள்ள கணினியில் தட்டச்சு செய்து பிரிண்ட் அவுட் எடுத்து கொடுத்தேன் என்று சொல்லியுள்ளார் என்றால் வாக்குமூலத்தில் அவ்வாறுதான் உள்ளது ஆனால் அவ்வாறு தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வாக்குமுலத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அனைத்து வாக்குமுலங்களையும் நான் படித்து பார்த்துதான் கையாப்பம் செய்வேன் என்றால் சரிதான். சங்கீதாவின் வாக்குமுலத்தை நான் படித்து பார்த்து உண்மை என்பதால்தான் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் தவறாக பதிவு செய்துள்ளதாக தற்போது தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல அது மனித தவறுதான்.

சம்பவம் நடந்த டோல்கேட்டுக்கு அருகில் ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் நிரைய மரங்கள் இருந்தது என்றால் சரிதான். அதை மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. டோல்பிளாசாவின் வடக்கு பக்கத்தில் மலை உள்ளது என்றும் அதை நான் வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் மலை தொலைவில்

உள்ளதால் குறிப்பிடவில்லை. டோல்பிளாசாவில் வேலை செய்த நபர்களை சம்வத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை அழைத்தபோது யாரும் சாட்சியம் சொல்ல முன்வரவில்லை. பழக்கடையின் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் செல்வகுமார் என்பவரை விசாரித்துள்ளேன். பழக்கடை வைத்துள்ள இடத்தின் அருகில் உள்ள வீட்டின் உரிமையாளரை விசாரித்தேனா என்றால் இல்லை. குமரன் என்பவரின் வாக்குமூலத்தில் இடைச்செருகலாக முதலில் வந்த நபர் கோபி கார்த்திக் என்று பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எதுவும் எழுதப்படவில்லை.

கத்தியால் குத்திய நபர்களை விசாரித்தேன் என்று சொல்லியுள்ள புகார்தாரர் எந்த நபரை விசாரித்து எதிரிகள் பெயரை தெரிந்துக்கொண்டேன் என்று சொல்லியுள்ளாரா என்றால் செல்வகுமாருக்கு அந்த எதிரிகளை ஏற்கனவே தெரியும் அதனால் அவர் சொன்னதை வைத்து புகார்தாரர் சொல்கிறார். அதிகாலை மருத்துவமனையில் போய் குமரன் மற்றும் செல்வகுமார் சேர்ந்தபோது தங்களை அடையாளம் தெரியாத பத்து நபர்கள் கத்தியால் தாக்கினார்கள் சொன்னதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அ.சா.1 மற்றும் அ.சா.2 சம்பவ நேரத்தில் கடையில் விளக்கு எரிந்துக்கொண்டிருந்தது என்று என் விசாரணையில் சொன்னார்களா என்றால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் வரைந்த வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட கடையில் எந்த எந்த இடங்களில் மின் விளக்கு எரிந்துக்கொண்டிருந்தது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் சம்பவஇடத்திற்கு போனது பகல் நேரம். மின் விளக்கு இருந்ததை பற்றி நான் குறிப்பிடவில்லை.

சம்பவ இடத்திற்கு நான் சென்று வரைபடம் வரைந்திருந்தால் அங்கிருந்த மரங்களை பற்றி குறிப்பிட்டிருப்பேன் என்றும் காவல் நிலையத்தில் வைத்து வரைந்ததால்தான் மரங்கள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல நான் சம்பவஇடம் சென்று தயாரித்த வரைபடம்தான். சாட்சி சங்கீதாவின் வாக்குமுலத்தின்படி இந்த வழக்கில் நான் வெளியில் சென்று சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியின் வாக்குமுலங்கள் எதிரிகளின் வாக்குமுலங்கள் மற்றும் மற்ற ஆவணங்கள்அனைத்தையும் நான் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமுலம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லப்படும் கண்ணமங்கலம் இரயில்வே கேட் சம்பவ இடத்திலிருந்து சுமார் 500 மீட்டர் உள்ளது என்றால் இருக்கும். நான்

சொன்ன இடத்திலிருந்து 50 அடி தூரத்தில் கண்ணமங்கலம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். கண்ணமங்கலம் இரயில்வே கேட் அருகில் காவலர் குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். கத்தியை எடுத்து கொடுத்ததாக சொல்லப்படும போலீஸ் பூத்தை பொறுத்தவரையில் இரவு பகலாக பாரா பணியில் இருப்பார்கள் என்றால் சரியல்ல அது பாயிண்ட் அங்க யாரும் நிலையாக போலீசார்இருக்க மாட்டார்கள். அந்த சமயத்தில் அந்த போலீஸ் பூத்தில் யாரும் பணியில் இல்லை. அந்த போலீஸ் பூத் எங்களின் தாலுக்கா காவல் நிலைய எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான்.

செல்வதுரையை ஆம்புலன்ஸில் அழைத்து சென்று டிரைவரை சாட்சியமாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. செல்வதுரையை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்த அவரின் தம்பி கார்த்தியை இந்த வழக்கில் சாட்சியமாக சேர்க்கிவல்லை. புகார்தாரர் குமரனை மருத்துவமனையில் சேர்த்த கஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

சாட்சிகள் ஏழுமலை, யூசுப் மற்றும் மாயகிருஷ்ணன் ஆகியோர்கள் பழக்கடையில் வேலை செய்த நபர்கள் என்றால் ஏழுமலை பழக்கடையில் வேலை செய்தவர், மாய கிருஷ்ணன் பக்கத்தில் உள்ள கடையில் டீ மாஸ்டராக வேலை செய்தவர். 1 முதல்

7 வரையிலான சாட்சிகளை 26.03.2023 அன்றுதான் விசாரித்தேன் என்றும் அதன் பின்னர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மாய கிருஷ்ணன் ராகவேந்திரா ஜூஸ் கடையில் டீ மாஸ்டராக வேலை செய்ததாக அவரின் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்பந்தமாக நான் 26.03.2023 அன்று கைது செய்த எதிரி கோபி கார்த்தியை சாட்சிகளிடம் காண்பித்து அடையாளம் ஏதாவது சொல்ல சொல்லி விசாரணை செய்தேனா என்றால் அவ்வாறு அடையாளம் காண்பித்து விசாரிக்கவில்லை ஏற்கனவே எதிரிகளை தெரியும் என்று சொன்னதால். சாட்சிகளுக்கு எதிரிகளின் அடையாளம் தெரியாது என்றும் நான் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யஅவ்வாறு சொல்லியுள்ளேன் என்றும் நீதிமனறத்தில்தான் எதிரிகளை சாட்சிகள் அடையாளம் காண்பித்தனர் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் அடையாளம் தெரியத பத்து நபர்கள் தாக்கினார்கள் என்றும் நான் உண்மைக்கு மாற்றாக பொய்யாக எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தெரியாத நபர்கள் தாக்கியதாக சொல்லப்பட்டிருந்தால் அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டும் என்றால் புகாரில் அடையாளம் தெரிந்த நபர்கள் தாக்கியதாகத்தான்

சொன்னார்கள். புகாரில் கோபி கார்த்திக்கின் தந்தை பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மற்ற இரண்டு எதிரிகள் எந்த ஊரைச்சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் குன்னத்தூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் போளூர்அருகில் உள்ள குன்னத்தூரா அல்லது சேவூர் அருகில் உள்ள குன்னத்தூரா என்று குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அனைத்து காயங்களும் ஒரே கத்தியில் ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்படும் நிலையில் கத்தியில் இரத்தகறை படிந்துள்ளதாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் பயன்படுத்திய கத்தியை கைப்பற்றவில்லை என்றும் கீழே இருந்த கத்தியை எடுத்துக்கொண்டு போய் இந்த வழக்கில் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சி ஏழுமலை என்பவர் கடையில் கீழே இருந்த கத்தியை போலிசார் எடுத்துக்கொண்டு போனார் என்று என் விசாரணையில் சொல்லவில்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

(மேற்படி சாட்சியத்தை Principal District Court, Thiruvannamalai யிலிருந்து Video conference மூலம் சாட்சி சொல்ல சொல்ல பதியப்பட்டு சாட்சிக்கு இந்த சாட்சியத்தின் PDF மின்னஞ்சல் மூலம் Principal District Court, Thiruvannamalai அவர்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு VC co–ordinator மூலம் சாட்சி அதை படித்து பார்த்து அதை hard copy–ல் கையொப்பம் போட்டு இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.)

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.03.03 18:06:29 +0530